**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்திய வானிலைத் துறை**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

***(03.07.2024 முதல் 07.07.2024)***

***அறிக்கை எண் 053/2024*** ***தேதி.02.07.2024***

***மாநிலத்தின் கடந்தவார வானிலை***

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை **30**°செ முதல் **40**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **23**°செ முதல் **29**°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை **16**°செ முதல் **21**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **12**°செ முதல் **14**°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

***கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை***

கோயமுத்தூர் மாவட்டத்தின் **28.06.24** முதல் **01.07.24** வரையிலும் பகல்நேரவெப்பநிலை **28**°செ முதல் **32**°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை **23**°C to 25°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் **93** சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் *71* சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு *17-24* கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

***கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை***

| கடந்த வார வானிலை (28.06.2024 முதல் 01.07.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 07.07.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **28/06** | **29/06** | **30/06** | **01/07** | **தேதி** | **நாள்-1 03/07** | **நாள்-2 04/07** | **நாள்-3 05/07** | **நாள்-4 06/07** | **நாள்-5 07/07** |
| 13.4 | 7.0 | 3.5 | 9.2 | **மழை (மி.மீ)** | 3 | 1 | 2 | 4 | 2 |
| 31 | 28 | 32 | 32 | **அதிக பட்ச வெப்பநிலை (°செ)** | 30 | 29 | 29 | 28 | 28 |
| 23 | 24 | 25 | 24 | **குறைந்த பட்ச வெப்பநிலை (°செ)** | 23 | 22 | 22 | 22 | 21 |
| 7 | 4 | 7 | 8 | **மேக மூட்டம் (ஆக்டா)** | 6 | 8 | 7 | 8 | 8 |
| 86 | 83 | 81 | 93 | **அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%)** | 80 | 80 | 80 | 80 | 80 |
| 76 | 71 | 78 | 81 | **குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%)** | 50 | 50 | 60 | 60 | 50 |
| 21 | 21 | 17 | 24 | **காற்றின் வேகம் (கி.மீ/மணி)** | 18 | 18 | 20 | 16 | 14 |
| 230 | 230 | 230 | 230 | **காற்று வீசும் திசை** | 250 | 250 | 250 | 180 | 250 |

***எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (03.07.2024 முதல் 07.07.2024)***

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை **28**°செ முதல் **30**°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை **21**°செ முதல் **23**°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் **80** சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் **50** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று

வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **03-07-2024** | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 |
| **04-07-2024** | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 2.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 |
| **05-07-2024** | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **06-07-2024** | 5.0 | 1.0 | 2.0 | 3.0 | 2.0 | 2.0 | 4.0 | 4.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 |
| **07-07-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தூறல் (அ) லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குதொடர்ச்சி மழையினை ஒட்டியுள்ள பகுதிகளில் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 - 24 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளவும்.<br>மருந்து தெளிப்பினை காலை நேரங்களிலோ (அ) 3-4 மணிநேரம் மழையில்லாத வானிலை எதிர்பார்க்கப்படும்போது மட்டும் மேற்கொள்ளலாம். |
| மக்காசோளம் | **விதைப்பு** | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி இறவையில் மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் இமிடாகுளோபிரிட் மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும்.<br>மக்காச்சோளம் விதைத்த மூன்று நாட்களுக்குள் அட்ரசின் என்ற முளைக்குமுன் தெளிக்கும் களைக்கொல்லியினை ஏக்கருக்கு 400 கிராம் அளவில் 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி குளிர்கால கம்போடியா பருத்தி விதைப்பிற்கான நிலம் தயாரிக்கவும். விதைப்பினை வரும் ஆகஸ்டு 15ம் தேதிக்குள் முடிக்கவும். |
| கொடி பூசணி | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி கொடி பூசணி வகைகளை போதுமான வடிகால் வசதி செய்து விதைக்கவும். |
| வாழை | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மணிக்கு 10 -24 கிமீ வரை வேக காற்றினை கருத்தில் கொண்டு 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| திராட்சை | | பருவமழை கால திராட்சையில் காய்ந்த மற்றும் வளர்ச்சியில்லாத கிளைகளை கவாத்து செய்ய இது நல்ல தருணமாகும். |
| மஞ்சள் | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் சாதகமான வானிலையினைப் பயன்படுத்தி 30 மற்றும் 60 நாட்களுக்கு மேலான மஞ்சளுக்கு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 72 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவும். |
| கால்நடைகள் | | காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடாரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிடவும்.<br>வேகமான காற்றினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சினைப்போக்க கால்நடைகளுக்கு போதிய குளிர்ந்த நீர் அளிக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் காற்றின் அதிக ஈரப்பதத்தின் காரணமாக பால் மாடுகளில் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும் மடுவினை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவி மடுவீக்க நோய் வராமல் தவிர்க்கவும். |

### குறுஞ்செய்தி

- எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி கொடி பூசணி வகைகளை போதுமான வடிகால் வசதி செய்து விதைக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**